**<u>IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No. 248/2001**

Deposition of **<u>D.W.3</u>** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 04.07.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name :பவளக்கொடி Husband Name : சின்னப்பன்

துவக்க நேரம் : 12.18 P.M

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>

1. தற்பொழுது எனக்கு என்ன வயது என்றால் 70 வயது ஆகும். எனக்கு எந்த வயதில் திருமணம் ஆகியது என்றால் எனக்கு 20 வயது இருக்கும்பொழுது திருமணம் நடைபெற்றது. திருமணம் எந்த ஆண்டு நடைபெற்றது என்றால் ஞபாகம் இல்லை. எனது கணவர் நலமுடன் உள்ளார் என்றால் ஆமாம்.

2. தாவா சொத்தில் எந்த ஆண்டிலிருந்து நான் அனுபவத்தில் இருந்து வருகிறேன் என்றால் எனக்கு திருமணமானது முதல் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறேன். தாவா சொத்து பெருமாள் கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான், ஆனால் அந்த சொத்தை அவர் எங்களுக்கு கொடுத்துவிட்டார். எந்த ஆண்டு அவ்வாறு கொடுத்தார் என்றால் ஆண்டு எனக்கு ஞாபகம் இல்லை.

3. வாதிகள் வழக்கை என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனது மாமனார், மாமியார் இறந்தபிறகு வழக்கு சொத்தில்தான் புதைக்கப்பட்டார்கள் என்று சொல்லியுள்ள பட்சத்தில் அதற்காக அரசாங்கத்திடம் அனுமதி பெற்றோமா என்றால் இல்லை. எனது மாமனார், மாமியார் இறந்த ஆண்டு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

4. நான் எனது மாமனார், மாமியார் சடலத்தை தாவா சொத்தில் புதைத்ததாக

வழக்கிற்காக வேண்டி பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அவ்வாறு அனுமதியின்றி புதைத்திருந்தால் அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கும் என்றால் சரியல்ல. எங்கள் ஊரில் இறந்தவர்களை புதைக்க மயானம் உள்ளதா என்றால் உள்ளது, ஆனால் அது 2 கி.மீ தூரத்தில் உள்ளது. பி.வா.சா.ஆ.6-ல் உள்ள விவரம் பற்றி தெரியுமா என்றால் தெரியாது.

5. நான் தாக்கல் செய்துள்ள நகை ஏல அறிவிப்பு ஆவணமான பி.வா.சா.ஆ-6 ஆனது நகைக்காக மட்டுமே அனுப்பப்பட்ட ஆவணம் என்றாலும், இந்த ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள உறுப்பினர் அடையாள அட்டையான பி.வா.சா.ஆ.7-ற்கும் தாவா சொத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

6. பி.வா.சா.ஆ.10, 11 ஆவணங்கள் எதற்காக வழங்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, எனது சொத்துக்காக தாக்கல் செய்துள்ளேன். எனது முதல் சாட்சியத்தில் பெருமாள் செட்டியாருக்கு நான் பணம் கொடுத்ததற்காக ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் தாவா சொத்து பெருமாள் செட்டியார் என்பவருக்கு தாவா சொத்து சொந்தமானது இல்லை என்றாலும், பெருமாள் கவுண்டர் என்பவருக்குதான் தியாகிகள் திட்டத்தின் கீழ் தாவா சொத்து வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

7. நான் சொல்வதுபோல் பெருமாள் செட்டியார் என்பவருக்கு தாவா சொத்து உரிமை இல்லாத பட்சத்தில் அந்த சொத்தை எங்களுக்கு கொடுத்து அனுபவித்து வருவதாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் பட்டா வழங்கப்பட்டுள்ளதா என்றால் பட்டாவிற்காக மனு கொடுத்துள்ளோம், ஆனால் பட்டா வழங்கப்படவில்லை. நான் சொல்வதுபோல் தாவா சொத்தில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும், கடந்த 23.11.2001 காலை 11 மணிக்கு வாதிகள் எவ்வித தகராறோ, பிரச்சனையோ செய்திருக்க வாய்ப்பில்லை என்றாலும் சரியல்ல.

8. வாதிகள் எங்களை தாக்கியதாக கூறியுள்ள நிலையில் அதுசம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள

நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் எதுவும் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கு பற்றிய எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றாலும், நான் சொல்லும் சாட்சியம் உண்மையல்ல என்றாலும் சரியல்ல. எனது சாட்சியம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

முடிவு நேரம்: 12.58 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-D.Jansi Rani
Additional District Munsif, Attur

Typed by Tmt. L. Kalaiselvi - O.S. No.248/2001, Dt.04.07.2025.